உதவியாளர்கள், கரும்பு அலுவலகம் மற்றும் பொது மேலாளர் ஆகியோர் இப்போது நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆலைக்குத் தேவையான நிலங்களை வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகள் எல்லாம் முடிந்த பிறகு இந்த ஆலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை தொடங்கப்பட்டவுடன் என்னுடைய பொன்னேரி தொகுதியைச் சார்ந்த ஆயிரக்கணக்கான வேலையில்லாத இளைஞர்களுக்கு இந்த ஆலையில் பணி செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலைக்குத் தேவையான ஆட்களைத் தேர்வு செய்வதற்கு, அந்த ஆலைக்கு நிலம் கொடுத்தவர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். மேலும் அந்தப் பகுதியிலே இருக்கிற வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

192--

தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் மறுவாழ்வு நிதி ஏற்படுத்துதல்

***16451-திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் மறுவாழ்வு நிதி ஒன்றை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் மறுவாழ்வு நிதி" என்ற பெயரில் மறுவாழ்வு நிதி ஒன்றினை அரசு ஏற்படுத்தி அதற்காக ரூபாய் ஒரு கோடி மானியமாக இந்த அரசு வழங்கியுள்ளது.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொழிலாளர்களும், பெரிய தொழிற்சாலைகளிலே உள்ளவர்களும் ஓரளவுக்கு மறுவாழ்வு நிதிகளை பெறுகிறார்கள். சிறு தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் எந்த மறு வாழ்வு நிதியும் பெறுவது இல்லை. சிலர் விபத்துக்குள்ளாகி கை இழந்து, கால் இழந்து, கண் இழந்து இருக்கின்ற தொழிலாளர்களுக்குகூட, அந்த சிறு தொழில் செய்கின்ற முதலாளிகள் எந்த விதமான மறுவாழ்வு நிதியும் வழங்குவது இல்லை. தங்கத் தலைவி டாக்டர் புரட்சி தலைவியினுடைய ஆட்சியில், இந்த மறுவாழ்வு நிதியை விரிவுபடுத்தி, அந்த சிறு தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்கும் உதவ அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டிய உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலவைர் அவர்களே, தொழிலாளர்களின் மறுவாழ்வு நிதியாக நமது தமிழகத்தினுடைய முதல்வர் அன்புத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1 கோடி ரூபாயை வழங்கியதற்காக மனமார்ந்த நன்றியை தொழிலாளர் வர்க்கத்தின் சார்பாக இங்கே சொல்லி, இப்படிப்பட்ட மில் தொழிலாளர்கள், என்ஜினியரிங் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் என்று சொல்லி பல்வேறு தொழிலாளர்கள் இன்றையதினம் சமுதாயத்திலே இருக்கிறார்கள். அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரங்களிலே அந்த தொழில்களினால் ஏற்படுகின்ற பாதிப்பை உடலிலே நோயாகக் கொண்டு அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு உடல் நிலை பரிசோதனை செய்து, மருத்துவ பரிசோதனை செய்து, அந்த நோயின் தன்மைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு அந்த நிதியை வழங்கிட அரசு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் நிதி ஒதுக்கிட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பெயரால் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் மறுவாழ்வு நிதியின் மூலம், ஒரு தொழிலை நவீனப்படுத்துவதினாலோ தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ நலிவு அடைந்த மூடப்பட்ட நிறுவனங்களில் ஆட்குறைப்பு அல்லது வேலை

1994 ஏப்ரல் 5]

யின்மை ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க வேண்டி அவர்களுக்கு என்று ஒரு நலத் திட்டம் தொழிலாளர் ஆணையர் மூலம் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 193, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

193--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட படித்த இளைஞர்களுக்கு நரிமணம் ஓ.என்.ஜி.சி.-யில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்தல்

*19465-திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் படித்துவிட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் அந்த மாவட்ட இளைஞர்களுக்கு நரிமணம் ஓ.என்.ஜி.சி.--யில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை தர மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது நடைமுறையில் உள்ள மைய அரசின் ஆணைகளின்படி Union Public Service Commission போன்ற அமைப்புகள் மூலமாக நிரப்பப்படாத காலியிடங்களை மைய அரசு நிறுவனங்கள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவித்து அவற்றின் மூலம் நிரப்புதல் வேண்டும். இந்த நடைமுறையை ஓ.என்.ஜி.சி. நிறுவனம் பின்பற்றவில்லை என்பதாகவோ அல்லது நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கும் மனுதாரர்களை நியமனம் செய்யாமல், வேறு மாவட்டத்தில் பதிவு செய்துள்ள மனுதாரர்களை ஓ.என்.ஜி.சி. நிறுவனம் நியமனம் செய்ததாக புகார் எதுவும் இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை. அவ்வாறு கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் மைய அரசுக்கு எழுதுவது பற்றி புரட்சித் தலைவி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.